# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).**

******

**முறையீட்டு மனு எண்.260/2017 நகராட்சி**
**ஆணை நாள். 04–09–2019.**

திரு.ம.மெய்தீன் அப்துல் காதர்,
168/B5, சிவன் கோவில் தெரு,
காயல்பட்டினம்,
தூத்துக்குடி மாவட்டம்–628204. -- முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். -- எதிர் மனுதாரர்..

**ஆணை.**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி, சிவன் கோவில் தெரு எண், 168/B- 5, என்ற முகவரியில் வசிக்கும் திரு.ம.மெய்தீன் அப்துல் காதர் என்பவரது 15.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2017 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.260/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு.ம.மெய்தீன் அப்துல் காதர் தனது முறையீட்டு மனுவில் தான் காயல்பட்டினம் நகராட்சியில் குடியிருப்பதாகவும், தனது வீட்டிற்கு முறையாக சொத்து வரி செலுத்தியுள்ள நிலையில் தனது வீட்டிற்கு குடிநீர் இணைப்புக் கோரி 08.08.2017 அன்று காயல்பட்டினம் நகராட்சிக்கு மனு அளித்ததாகவும், பல நாட்கள் ஆன பின்னரும் தனக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படாத நிலையில் தான் மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்ததாகவும், தனது மனுவிற்கு தான் குடியிருக்கும் பகுதி வரன்முறைப்படுத்தப்படாத இடம் என்பதால் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது என நகராட்சி மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் தன் வீட்டுக்கருகில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே தனக்கு குடிநீர் இணைப்பு வழங்க ஆணையிடக் கோரியுள்ளார்.

காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் 03.01.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெறக் கோரிய மனு பெறப்பட்டதாகவும், மேற்படி இடம் சிவன் கோவில் தெரு நகரின் விரிவாக்க பகுதியாகவும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மனையாக உள்ளதாலும் அவ்விடத்தில் ஒரு சில வீடுகள் அமைந்துள்ள நிலையில் குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் குடிநீர் பகிர்மாண குழாய் அப்பகுதியில் பதிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக 04.09.2017 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்பகுதி விரிவாக்க பகுதி என்பதால் தற்போது மனைப்பிரிவு அங்கீகாரம் சம்பந்தமாக
மாண்புமை உயர் நீதி மன்ற உத்திரவின்படி (1) அரசாணை எண்.G.O.Ms.No. 78, Housing and Urban
Development (UD4-3) நாள். 04.05.2017 ன்படி அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல்
மற்றும் (2) அரசாணை எண்.G.O.Ms.No. 111/Housing and Urban Development (UD4-3)
நாள். 22.06.2017 ன்படி அங்கீகாரமற்ற வீடுகள் முறைப்படுத்துதல் (http://ri buildingreg.in) மூலம்
விண்ணப்பம் செய்து முறைப்படுத்திக் கொள்ள தெரிவிக்கப்பட்டதாகவும் மேலும் இவ்வாணைகளின்படி
முறைப்படுத்தாத மனைகள் மற்றும் வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்ய இயலாது எனவும்
குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார், மேலும் முறையீட்டு மனுதாரர் இணைய தளம் மூலம் முதலமைச்சரின்
தனிப்பிரிவிற்கு அனுப்பிய 28.08.2017, 05.09.2017 நாளிட்ட மனுக்களுக்கு காயல்பட்டினம் நகராட்சி மூலம்
முறையே 04.09.2017 மற்றும் 21.09.2017 நாளிட்ட கடிதங்கள் மூலம் பதில் அனுப்பப்பட்டுள்ளதாகவும்
தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவில் 110 மனைகள்
உள்ளதாகவும், மேற்படி மனுதாரின் மனைக்கு செல்லும் பாதை நகராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை
என்பதால் பைப்லைன் அமைக்கப்படவில்லை எனவும் ஏற்கனவே தெரிவித்த அரசாணைகளின்படி
அப்பகுதியில் உள்ள மனை உரிமைதாரர்களால் விண்ணப்பம் செய்து மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு
கூடுதலாக வீடுகள் கட்டப்பட்டவுடன் அப்பகுதியில் குடிநீர் பைப்லைன் பதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
எனவும் அச்சமயம் மனுதாரின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் எனவும் தனது அறிக்கையில்
தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதார் திரு.ம.மெய்தீன்
22.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் காயல்பட்டினம் நகராட்சி பகுதியில்
அப்துல் காதர் தனது வாக்குமூலத்தில் தான் கடந்த 29 ஆண்டுகளாக காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் தனது வீட்டினையும் சேர்த்து
குடியிருந்து வருவதாகவும், தான் வீடு கட்டியுள்ள சிவன் கோவில் தெருவில் தனது வீட்டினையும் சேர்த்து
மொத்தம் 6 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இப்பகுதி 1989 ஆம் ஆண்டு போடப்பட்ட மனைபிரிவு எனவும்
தங்கள் ஊரில் உள்ள அனைத்து மனைகளும் அங்கீகரிக்கப்படாத மனை என நகராட்சி மூலம் தனக்கு
தகவல் பெறும் உரிமை சட்டத்தின்படி கோரிய கடிதத்திற்கு பதில் வழங்கியுள்ளதாகவும், நகராட்சி மூலம்
மேற்படி வீடுகளுக்கு கட்டிட அனுமதி, சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது குடிநீர்
இணைப்பு வழங்குவதற்காக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், தனது வீட்டிற்கு விரைவில்
குடிநீர் இணைப்பு கிடைத்து விடும் எனவும், தனது மற்ற இரு குற்றச்சாட்டுகள் குறித்தான புகார்
முறைமன்ற நடுவத்தில் சேரவில்லை என்பதால் அதன் அசலை மீண்டும் சமர்ப்பிப்பதாகவும், அதனையும்
சேர்த்து விசாரிக்குமாறும், தான் குடிநீர் கோரி வழங்கிய மனுவிற்கு முன்னாள் நகராட்சி ஆணையரும்
தற்போதைய விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளருமான திரு.பொன்னம்பலம் என்பவர் அனைத்து
வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு வழங்கிவிட்டு தனக்கு மட்டும் வழங்கவில்லை எனவும், அவர் மற்றவர்களிடம்
மேற்படி குடிநீர் இணைப்பிற்காக கையூட்டு பெற்றுள்ளதாகவும், எவ்வளவு கையூட்டு வாங்கினார் என
தனக்கு தெரியாது எனவும், காயல்பட்டினம் நகராட்சியில் ஒரு இடம் கூட அங்கீகரிக்கப்பட்ட மனை அல்ல
எனவும் நகராட்சியால் அங்கீகரிக்கப்படாத இடம் என விளம்பர பலகை வைத்து விடுவார்கள் எனவும்,
ஆனால் அங்கீகாரம் கொடுத்து விடுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். 2016–ஆம் ஆண்டில்
திரு.பா்குணன் என்பவர் நகரமைப்பு ஆய்வாளராக இருந்ததாகவும், அவர் தனக்கு பணம்
கொடுக்காவிட்டால் தனது வீட்டினை இடித்து விடுவதாக கூறியதாகவும், முன்னாள் நகராட்சி
ஆணையாளர் திரு.பொன்னம்பலம் தனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதோடு பணம் மற்றும் கால
விரயத்தினை ஏற்படுத்தினார் எனவும் எனவே தனக்கு நிவாரணம் பெற்றும் தருமாறும் கோரியுள்ளார்.

22.052017 அன்று காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் திரு.J. பிரேம் ஆனந்த் தனது வாக்கு
மூலத்தில் தான் காயல்பட்டினம் நகராட்சியில் கடந்த ஒரு மாத காலமாக ஆணையாளராக பணிபுரிந்து
வருவதாகவும், முறையீட்டு மனுதாரரின் வீடு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ளது எனவும் இதற்கு
முன்னாள் நகராட்சி ஆணையாளரால் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் கட்டிடம்

கட்டப்பட்டுள்ளதாகவும், இது போன்று 70 சதவீதம் கட்டிடங்கள் அங்கீகரிக்கப்படாத மனைகளில் கட்டப்பட்டுள்ளதாகவும், வளர்ச்சி அடைந்த பகுதிகளில் பொதுவாகவே இது போன்று அங்கீகரிக்கப்படாத மனைகளில் முதலில் ஒரு வீடு கட்டுவார்கள் எனவும், அதற்கு சொத்து வரி ரசீது பெற்றுக் கொள்வதாகவும், அதன் அடிப்படையில் தொடர்ந்து சில இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு, அவ்விடங்கள் வளர்ச்சி அடைந்த பகுதியாக கருதப்பட்டு உடனடியாக கட்டிடம் கட்டப்பட்டு ஏற்கனவே மறுதலளிக்கப்பட்ட மனு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு பின்பு வளர்ச்சி அடைந்த பகுதி என்ற நிலைக்கு வந்து சில வீடுகள் உருவாக்கப்பட்ட பின்பு வீடு கட்ட கட்டிட அனுமதியினை நகராட்சியில் பெற்று கொண்டு விடுவதாகவும், நகரமைப்புத் துறையால் பரிந்துரை செய்யப்பட்டு அனுமதி பெற்று விடுவார்கள் எனவும், மனுதாரரின் இடத்திற்கு ஏற்கனவே மேலே குறிப்பிட்டுள்ள முந்தைய ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் தற்போது குடிநீர் இணைப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளதாகவும், விரைவில் மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது 22.05.2018 நாளிட்ட மனுவில் காயல் பட்டினம் நகராட்சி, சிவன் கோவில் தெருவினை சார்ந்த பகுதிகளுக்கு சாலைகள் அமைக்க பல மனுக்களை நகராட்சி, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு ஆகியவைகளுக்கு அனுப்பியும் மேற்படி மனுக்களுக்கு சாலைகளை போடாமலேயே போட்டதாக தவறான தகவல்களை பதிலாக அனுப்பியுள்ளதாகவும், மேலும் நகராட்சி காலிமனை வரியினங்களை சரியாக வசூலிப்பதில்லை எனவும் இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும், இருபது, முப்பது ஆண்டுகளாக வியாபார நோக்கில் நிலங்களை கையகப்படுத்தி தனியார் அதனை விற்றுச் செல்லும்போது கடந்த ஆண்டுகளுக்கான எந்த வரியினையும் நகராட்சிக்கு செலுத்தமல் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

20.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரரின் 22.05.2018 நாளிட்ட மனு காயல்பட்டினம் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

16.07.2018 நாளிட்ட காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் கடிதத்தில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையான மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 12.06.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேற்படி சிவன் கோவில் தெருவில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வந்ததால் சிவன் கோவில் தெரு (அக்பர் பாஷா நகர் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் தெருக்கள், மற்றும் குறுக்குத் தெருக்கள்) சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் தற்போது வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரர் கோரியுள்ள சாலை சுமார் 982 மீட்டர் நீளமுள்ளது எனவும் அச்சாலையினை அமைக்க நகராட்சி நிதியிருப்பினை கருத்தில் கொண்டு நகராட்சியின் வருவாய் நிதி அல்லது அரசின் திட்ட நிதி போன்ற நிதிகளில் நிதி ஒதுக்கீடு பெற்று சாலையினை விரைவில் சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், தற்போது சிவன் கோவில் தெரு பிரதான சாலை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேம்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் நகராட்சியில் உள்ள காலிமனை வரிகளை அரசு விதிமுறைகளின்படி வசூலித்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் ஆகியோரின் வாக்குமூலம், நகராட்சி ஆணையரின் 16.07.2018 நாளிட்ட கூடுதல் மனுவிற்கான விளக்க அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையான குடிநீர் குழாய் இணைப்பு நகராட்சி மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் சாலை அமைப்பது தொடர்பாக சிவன் கோவில் பிரதான சாலை அமைக்கப்பட்டும் மற்ற சாலைகளை அமைக்க நகராட்சி நிதியிருப்பு மற்றும் அரசின் நிதியினை பெற்று சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

காலிமனையிட வரியினங்களை அரசு விதிமுறைகளின்படி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட நிலையில் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிட முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.
4/9/2019

பெறுநர்

1.திரு.ம.மொய்தீன் அப்துல் காதர்,
168/ந, சிவன் கோவில் தெரு,
காயல்பட்டினம்,
தூத்துக்குடி மாவட்டம்–628204.

2.ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலர் அவர்களின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.